# திக்வெல்ல பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 10 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திக்வெல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 142,639 இற்கான 05 சொத்து விடயங்களை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 378,792 தொகை எனினும் ரூபா 283,267 தொகை என மூலதனப்படுத்தியிருந்தமையால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 95,525 ஆகும்.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் திரண்ட நிதியக் கணக்கின் பெறுமதி ரூபா 15,482,402 ஆக காணப்பட்டதுடன் பிரதான பேரேட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 23,159,092 ஆக காணப்பட்டமையால் ரூபா 7,676,690 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் கணக்கின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்காக வருமானத்தின் பங்களிப்பு கணக்கு சமமாக காணப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 135,953,163 தொகையும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு ரூபா 136,711,539 என காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 758,376 ஆகும்.

(உ) முன்னைய ஆண்டிற்கான செலவுக் கடன்கொடுத்தோரின் பெறுமதி பட்டோலையில் குறைவாகக் காட்டப்படல் அதே பட்டோலையில் திருத்தம் மேற்கொள்வதற்கு பதிலாக நாட்குறிப்பு இலக்கம் 40 இன் மூலம் ரூபா 39,849,350 இற்கான தொகையொன்று செலவுக் கடன்கொடுத்தோர் வரவு வைத்து திரண்ட நிதியக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது அதே பெறுமதியால் செலவு கடன்கொடுத்தோர் பெறுமதி குறைதலும் திரண்ட நிதியம் மிகைத்தலும் நடைபெற்றுள்ளது.

(ஊ) சபையில் பிணை வைக்க வேண்டிய 13 அலுவலர்கள் தொடர்பாக தேசிய சேமிப்பு வங்கியில் காணப்படும் ரூபா 8,500 இற்கான வைப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் கைவிடப்பட்டுள்ளது.

(எ) மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 1,161,538 இற்கான நீதி மன்றத் தண்டப் பணப் பெறுவனவு முத்திரைக் கட்டணம் பெறுவனவு என காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக முத்திரைக் கட்டண வருமானம் பெறுவனவு அதிகரித்தலும் நீதி மன்றத் தண்டப் பண வருமானப் பெறுவனவு குறைதலும் நடைபெற்றுள்ளது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

முத்திரை வைப்புக் கணக்குகளில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 101,133 ஆக காணப்பட்டதுடன் பட்டோலையின் பிரகாரம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 132,955 ஆக காணப்படாமையால் வித்தியாசம் ரூபா 31,822 ஆகும்.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,907,625 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 138,311,971 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 153,004,743 பெறுமதியான 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, காலப்பகுப்பாய்வு அறிக்கை போன்றன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| (i) | விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீகரித்த செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) | விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் வருடாந்தக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்காக அவ்வாறு செய்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,248,182 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 627,340 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 2,545 | 1,802 | 1,566 |
| வாடகை | 5,463 | 4,136 | 1,473 |
| ஏனைய வருமானங்கள் | 37,666 | 42,550 | 125,014 |

#### 2.2.2 வீத வரி

மீளாய்வாண்டிற்கான பில்போடப்பட்ட வீத வரி தொகை ரூபா 1,411,658 ஆக காணப்பட்டதுடன் அத் தொகையில் ஆண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 738,450 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் அறவீடுகளில் முன்னேற்றம் நூற்றிற்கு 52 ஆகும். அதே போல் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வீத வரி ரூபா 1,358,801 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 409,162 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 30 ஆகும்.

2.2.3 வாடகை

---------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட வாடகை ரூபா 818,167 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான பில்போடப்பட்ட தொகை ரூபா 1,889,630 ஆகும். மீளாய்வாண்டின் போது மொத்த பெறுவனவுகள் ரூபா 1,594,289 ஆக காணப்பட்டமையால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக முன்னேற்றம் நூற்றிற்கு 59 ஆகும்.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு

| | | ரூபா. |
|---|---|---|
| (அ) | நீதி மன்றத் தண்டப் பணம் | 379,973 |
| (ஆ) | முத்திரைக் கட்டணம் | 8,594,974 |

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------

2015 ஜனவரி 31 திகதிய கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் சபையின் பண்டக் கணிப்பீட்டில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) இரண்டு ஆயுள்வேத மருந்தகங்களில் 91 வரையான மருந்து வகைகள் கையிருப்பு என காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றின் பெறுமதி பண்டக் கணிப்பீட்டு அறிக்கைகளில் காட்டியிருக்காமையால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதியுடன் இணக்கஞ் செய்ய முடியாதிருந்தது.

(ஆ) சபையின் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த 28 வகைப் பதிவேட்டுப் பொருட்களைச் சேர்ந்த 84 பண்டங்களில் பற்றாக்குறை காணப்பட்டதுடன் 14 வகையான பொருட்களில் 48 மிகையாகக் காணப்பட்டதுடன் பற்றாக்குறை பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்களிடம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவல்லை.

(இ) சபைக்கு சொந்தமான மூன்று நூலகங்களில் 134 புத்தகங்களின் பற்றாக்குறை ஒன்று காணப்பட்டது. அத்துடன் இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நபர்களிடம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 02 | 02 | - | - |
| இரண்டாம் தரம் | 29 | 26 | 03 | - |
| ஆரம்ப தரம் | 51 | 55 | - | 04 |
| ஏனைய(அமைய, தற்காலிக,ஒப்பந்த) | - | 08 | - | 08 |
| | 82 | 91 | 03 | 12 |

மீளாய்வாண்டிற்கான உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பதவியணி சம்பளங்கள் மற்றும் மந்திரிமார் படி ஆக ரூபா 20,454,406 இற்கான தொகையொன்று மீளளிப்பு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான சம்பளங்கள் அமர்வுப் படி என ரூபா 21,547,675 செலுத்தப்பட்டிருந்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 1,093,269 இற்கான செலவுப் பொறுப்பு ஒன்று ஏற்பட்டுள்ளது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம்

சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டு கட்டுப்பாடு

பாதீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள் இடையே கணசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்தமையால் சபையின் பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்